மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.04/2024
அ.வ.எண்.198/2020

1. வட்டாட்சியர்
2. வருவாய் கோட்டாட்சியர்
3. தமிழ்நாடு அரசு சார்பாக மாவட்ட ஆட்சியர்
4. பொதுத்தகவல் அலுவலர்
5. உதவி பொது தகவல்/உதவி இயக்குநர் (AH) ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

ராஜமாணிக்கம் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 06.11.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.முத்துசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், மனுதாரர்கள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 7 விதி 11 மற்றும் பிரிவு 151–ன் கீழ் வழக்கு சொத்தானது தமிழ்நாடு வருவாய் சட்டத்திற்கு எதிராக உள்ளதால் முகாந்திரம் இல்லாத எதிர்மனுதாரர்/வாதியின் வழக்குரையை வழக்கின் கோப்பிலிருந்து நீக்கறவு செய்து உத்தரவிடக் கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) (i) தாவா சொத்து தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான மேய்ச்சல் தரை அரசு புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்ட ஆட்சேபணைக்குரிய சொத்தாகும். தமிழ்நாடு வருவாய்

சட்டத்தில் அரசு புறம்போக்கு மேய்ச்சல் தரைகளை தனியாருக்கு அடமானம் செய்யவோ, பட்டா வழங்கவோ கூடாது என்றும், எவ்வகையிலும் மேற்படி நிலங்களை ஒதுக்க கூடாது என்று மேற்படி வருவாய் சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி நிலங்களை குறித்து சிவில் நீதிமன்றத்தில் வழக்கிட சட்டப்படியான தடையாணை உள்ளதாலும் மேற்படி எதிர்மனுதாரர்/வாதியின் வழக்குரை நிராகரிக்கத்தக்கதாகும். எதிர்மனுதாரருக்கு பள்ளிப்பட்டி கிராமத்தில் பட்டா நிலங்கள் உள்ள நிலையில், வழக்கு சொத்துக்களை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து துர்லாபம் அடைய எதிர்மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

(ii) மேலும் அரசாங்கத்தின் அரசாணை எண் 186 ன்படி மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களை வேறு எந்த உபயோகத்திற்கும் மாற்றம் செய்யகூடாது என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் எதிர்மனுதாரர் தாவா சொத்தை விவசாய உபயோகமாக கால்நடைகள் மேய்ச்சலுக்கு பயன்படுத்தி வந்துள்ளனர். அது பொது பயன்பாடு என்பதால் அவை எதிரிடை அனுபோகம் ஆகாது. எனவே உரிமையியல் நீதிமன்றம் மேற்படி வழக்கை விசாரிக்க ஆள்வரை இல்லை என்ற காரணத்தாலும், இவ்வழக்கு தாக்கல் செய்ய எவ்வித வழக்குமூலமே எழவில்லை என்பதாலும் வழக்கினை கோப்பிலிருந்து நீக்கறவு செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டுள்ளார்.

3) மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்குரைஞரின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு:–

(i) தாவா சொத்து தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான மேய்ச்சல் தரை அரசு புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்ட ஆட்சேபணைக்குரிய சொத்து என்றும், தமிழ்நாடு வருவாய் சட்டத்தில் அரசு புறம்போக்கு மேய்ச்சல் தரைகளை தனியாருக்கு அடமானம் செய்யவோ, பட்டா வழங்கவோ கூடாது என்றும், எவ்வகையிலும் மேற்படி நிலங்களை ஒதுக்க கூடாது என்று மேற்படி வருவாய் சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி நிலங்களை குறித்து சிவில் நீதிமன்றத்தில் வழக்கிட சட்டப்படியான தடையாணை உள்ளதாலும் மேற்படி எதிர்மனுதாரர்/வாதியின் வழக்குரை நிராகரிக்கத்தக்கது என்றும், எதிர்மனுதாரருக்கு பள்ளிப்பட்டி கிராமத்தில் பட்டா நிலங்கள் உள்ள நிலையில், வழக்கு சொத்துக்களை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து துர்லாபம் அடைய எதிர்மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(ii) மேலும் அரசாங்கத்தின் அரசாணை எண் 186 ன்படி மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களை வேறு எந்த உபயோகத்திற்கும் மாற்றம் செய்யகூடாது என ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்றும், மேலும் எதிர்மனுதாரர் தாவா சொத்தை விவசாய உபயோகமாக கால்நடைகள் மேய்ச்சலுக்கு பயன்படுத்தி வந்துள்ளனர் என்றும், அது பொது பயன்பாடு என்பதால் அவை எதிரிடை அனுபோகம் ஆகாது என்றும், எனவே உரிமையியல் நீதிமன்றம் மேற்படி வழக்கை விசாரிக்க ஆள்வரை இல்லை என்ற காரணத்தாலும், இவ்வழக்கு தாக்கல் செய்ய எவ்வித வழக்குமூலமே எழவில்லை என்பதாலும் வழக்கினை கோப்பிலிருந்து நீக்கறவு செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் மதிப்புமிக்க வாதங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. மனுபிரமாணப் பத்திரிக்கை மற்றும் சான்றாவணங்கள் ஆகியவை கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இந்நிலையில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள

வழக்குரையை பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரரின் வழக்குப்படி எதிர்மனுதாரரின் முன்னோர்கள் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னரே புறம்போக்கு நிலமான வழக்கு சொத்தை ஆக்கிரமித்து அதில் வீடு கட்டி சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாகவும், எதிர்மனுதாரரின் சுவாதீன அனுபவத்தை அங்கீகரித்து அரசாங்கத்தால் எதிர்மனுதாரர் பெயரில் வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும், தாவா சொத்தை பொறுத்து எதிர்மனுதாரருக்கு எதிரிடை அனுபவ உரிமை எழுவதாகவும், அதனால் மேற்படி உரிமையை விளம்ப பரிகாரம் கோரியுள்ளது தெரியவருகிறது.

(iv) இந்நிலையில் மனுதாரர்கள் வழக்குரையை நிராகரிக்க முன்வைக்கும் பிரதான காரணங்கள் யாதெனில், இவ்வழக்கை புலன்கொண்டு விசாரிக்க நீதிமன்ற ஆள்வரையறை தடை செய்யப்பட்டுள்ளது என்பதும், இவ்வழக்கிற்கு வழக்குமூலம் எழவில்லை என்பதுமே ஆகும். மேற்கண்ட காரணங்களில் முதல் காரணத்தை பரிசீலனை செய்கையில், எந்த சட்டத்தின், எந்த பிரிவின்படி வழக்கை புலன்கொண்டு விசாரிக்க உரிமையியல் நீதிமன்றத்திற்கு ஆள்வரையறை இல்லை என மனுதாரர்களால் குறிப்பாக மனுவில் சொல்லப்படவில்லை என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. அவ்வாறு குறிப்பாக எந்த சட்டத்தின்படி அதிலுள்ள எந்த பிரிவின்படி உரிமையியல் நீதிமன்றத்தின் ஆள்வரையறை தடை செய்யப்பட்டுள்ளது என இந்நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்படாத நிலையில், மேற்படி வாதம் ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனெனில், உ.வி.மு.ச. பிரிவு 9 ன் படி உட்கிடையாகவோ, வெளிப்படையாகவோ தடை செய்யப்படாத வரை அனைத்து உரிமையியல் தன்மை கொண்ட வழக்குகளையும் விசாரிக்க உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்பது நன்கு நிறுவப்பட்ட சட்ட நிலைப்பாடாகும்.

(v) அடுத்ததாக, எதிர்மனுதாரரின் வழக்கிற்கு வழக்குமூலம் எழுகிறதா? என்பதை பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர் வாதப்படி, சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்தில் எதிர்மனுதாரரும், அவரது முன்னோர்களும் உள்ளதாகவும், அதை அனுசரித்து அரசாங்கத்தால் எதிர்மனுதாரர் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதேசமயத்தில், மனுதாரர்களும் இம்மனுவில் எதிர்மனுதாரர் தாவா சொத்தை விவசாய உபயோகமாக

கால்நடைகள் மேய்ச்சலுக்கு பயன்படுத்தி வந்துள்ளனர் என்றும், ஆனால் அது பொது பயன்பாடு என்பதால் அவை எதிரிடை அனுபோகம் ஆகாது என்றும் தெரிவித்துள்ளதும் தெரியவருகிறது.

(vi) மேற்படி சங்கதிகளை கருத்தில் கொள்கையில், இங்கு மனுதாரர்களே எதிர்மனுதாரர் தாவா சொத்தை விவசாய உபயோகமாக கால்நடைகள் மேய்ச்சலுக்கு பயன்படுத்தி வந்தனர் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளது தெரியவருகிறது. ஆனால் மனுதாரர்கள் முரண்படும் சங்கதி யாதெனில், மேற்படி பயன்பாடு பொதுப்பயன்பாடு என்பதால், அவை எதிரிடை அனுபோகம் ஆகாது என்பதே ஆகும். அவ்வாறு தாவா சொத்திலுள்ள எதிர்மனுதாரரின் அனுபோகம் பொதுப்பயன்பாடா? என்பதும், மேற்படி அனுபோகத்தின் அடிப்படையில் எதிர்மனுதாரர் அரசாங்கத்திற்கு எதிராக எதிரிடை அனுபவ உரிமை கோர இயலுமா? என்பவை சட்டம் மற்றும் சங்கதி கலந்த பிரச்சனைகளாகும். மேற்படி பிரச்சனைகள் குறித்து வழக்கு விசாரணைக்கு பின்னிட்டே தீர்மானிக்க இயலும் என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

(vii) மேலும் ஒரு வழக்கிற்கு வழக்குமூலம் என்றால் என்ன? என்பது குறித்து மாண்பமை உச்சநீதிமன்றத்தால், **“1989 (2) SCC 163, A.B.C. Laminart Pvt. Ltd., and Another vs. A.P.Agencies, Salem”** என்ற வழக்கில், “... to explain that the cause of action means every fact which, If traversed, would be necessary for the plaintiff to prove in order to seek a decree and relief against the defendant, Cause of action requires infrigement of the right or breach of an obligation and comprises of all material facts on which the right and claim for breach is founded, that is, some act done by the defendant to infringe and violate the right or breach an obligation...” என்ற சட்ட நிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி சட்ட நிலைப்பாட்டை கருத்தில் கொள்கையில், ஒரு வழக்கிற்கு வழக்குமூலத்தை உருவாக்க வாதிக்கு சட்டப்படியான உரிமை ஒன்று இருந்திருக்க வேண்டும். மேற்படி சட்டப்படியான உரிமைக்கு பிரதிவாதியின் செயலால் ஊறு விளைவிக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்படி இரண்டு காரணிகளும் இருக்கும்பட்சத்தில், மேற்படி வழக்கிற்கு வழக்குமூலம் எழுகிறது என்பது தெளிவாகிறது.

(viii) மேற்கண்ட சட்டநிலைப்பாட்டை கருத்தில் கொள்கையில், தாவா சொத்தை பொறுத்து எதிர்மனுதாரர் எதிரிடை அனுபவ உரிமை கோரி, எதிர்மனுதாரரால் தனது அனுபவம் தொடர்பாக சில ஆவணங்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், இவ்வழக்கிற்கு வழக்குமூலம் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆனால் மேற்படி வழக்குமூலம் உண்மையானதா? பொய்யானதா? என்பது குறித்து அசல் வழக்கில்தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்நிலையில் மேற்படி இந்நீதிமன்றத்தின் தீர்மானிப்பிற்கு வழிகாட்டும் விதமாக, சென்னை உயர்நீதிமன்றத்தால், "2023(3) MWN (Civil) 769, Balaji and others vs. Arumugam and others" என்ற வழக்கில்,

> "13. All the complex facts and circumstances are to be adjudicated with reference to the documents and evidences and the Trial court ought not to have arrived a conclusion that the plaint is to be rejected on these grounds.
> 14. The power unde order 7 rule 11 of CPC is to be exercised sparingtly by the courts. All the suits are to be adjudicted on merits and in accordance with the law. Lenient view is certainly not desirable when the plaint and cause of action reveals certain facts and therefore, the courts are expected to be doubly cautions while exercising the power under order 7 rule 11 of CPC. There may be vexatious suits which all are instituted by the litigants. May that as it be. Even in such cases, if there are certain doubtful facts or otherwise then conducting a trial would be more preferable than rejecting the plaint. Order 7 Rule 11of CPC enumberates rejection of plaint on certain circumstances as contemplated under sub clauses (a) to (f) in Rule 11."

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ix) மேற்கண்ட சட்டநிலைப்பாட்டை கருத்தில் கொள்கையில், இவ்வழக்கில் சட்டம் மற்றும் சங்கதி கலந்த எழுவினாக்கள் எழும் நிலையிலும், வழக்குமூலம் சில சங்கதிகளை வெளிப்படுத்தும் நிலையிலும், அவற்றை விசாரணையின் அடிப்படையிலேயே தீர்மானிக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. அதனால் வழக்குரையை நிராகரிக்க கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு தகுதிப்பாடுகளின் அடிப்படையில் செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.12.12 18:37:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:–</u> இல்லை

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 11.12.2001 | அரசாணை எண்.186 ன் சுருக்கம் | சான்றுநகல் |
| | 27.12.2019 | அரசாணை எண்.186 ன் Abstract | சான்றுநகல் |
| ம.சா.ஆ.2 | 28.05.2007 | அரசாணை எண்.75 ன் சுருக்கம் | சான்றுநகல் |
| ம.சா.ஆ.3 | 17.08.2012 | அரசாணை எண்.145 ன் Abstract | சான்றுநகல் |
| ம.சா.ஆ.4 | 09.06.2019 | பணித்தளத்தை தேர்வு செய்ய கோரும் கடிதம் | சான்றுநகல் |
| ம.சா.ஆ.5 | 12.06.2020 | பணித்தளத்தை தேர்வு செய்ய கோரும் கடிதம் | சான்றுநகல் |
| ம.சா.ஆ.6 | 18.03.2020 | அரசாணை எண்.63 ன் Abstract | சான்றுநகல் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.12.12 18:37:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.